# ஐந்திணைகளில் முல்லைத்திணையின் சிறப்பு

முனைவர் மா. கலாமணி
கோபி

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

**முன்னுரை**

முல்லை என்பது பண்டையத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகை தமிழ் நிலத்திணைகளில் ஒன்றாகும். செம்மண் பரந்திருத்தலால் முல்லை நிலமானது செம்புலம் எனவும் அக்கப்படுகிறது. இந்நிலம் முல்லை மலரைத் தழுவி பெயரிடப்பட்டது. காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை நிலம் எனப்படும். இந்நில மக்களின் தொழிலாகிய சாமை, வரகு விதைத்தல், களை எடுத்தல், குழலூதுதல், ஏறுதழுவுதல், குரவைக் கூத்தாடல், மந்தை மேய்த்தல் ஆகியவையும் சிறப்பிடம் பெறுகின்றன. ஐந்திணைகளில் முல்லைத் திணையின் சிறப்பினை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தொல்காப்பியத்தில் முல்லைத்திணை**

காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லைத் திணை ஆகும். இத்திணைக்குரிய கடவுள் திருமால். இதனை,

**“மாயோன் மேய காடுறை உலகமும்” (தொல். அகத்)**

என்ற நூற்பாவின் மூலம் அறிய முடிகிறது.

**முல்லைத் திணை விளக்கம்**

முல்லைத் திணை என்பது முல்லை நிலத்திற்கு உரியது. இந்நிலத்து மக்கள் நிலத்தை உழுது வரகும், தினையும் விளைவிப்பர். வழிப்போக்கர்களுக்கு நுவணை என்னும் திணை மாவை விருந்தாகத் தருவர். முல்லை நிலம் திரிந்த கடறு மற்றொரு வகை. இது காடு விளையாமல் வறண்டு கிடக்கும் நிலம். இங்குள்ள மகளிர் ஆண்கள் காலில் அணியும் கழலை வீரத்தின் வெளிப்பாடாக அணிந்துகொண்டு திரிவர்.

**முல்லைநில மலர்கள்**

மாரிக் காலத்தில் கானகத்தில் கண்ணைக் கவரும்படி பூத்திருக்கும் மலர்கள் பல. இலைகளை உடைய காயாச் செடிகள், மையைப்போல மலர்ந்து இருக்கின்றன. தளிரையும், பூங்கொத்துக்களையுடைய கொன்றை நல்ல பொன்னைச் சொரிந்தது. வெண்காந்தல்களின் குவிந்த மொட்டுக்கள் உள்ளங்கையைப்போல மலர்ந்தன. தோன்றிச் செடிகள் இரத்தம்போலப் பூத்திருக்கின்றன என்பதனை,

**நறுவீ முல்லை**
**சேண்நாறு பிடவம்**
**செரியிலைக் காயா**
**முறியினரைக் கொன்றை**
**கோடல் குவிமுகை**
**தோடார் தோன்றி**

என முல்லைப்பாட்டு எடுத்துரைக்கின்றது.

**நீர்**

**முல்லைப்பாட்டில்,**

**கான்யாறு தழீஇய அகன் நெடும்புறவு**

என்ற வரியில் முல்லை நிலத்து நீரினை ஆசிரியர் மொழிகிறார்.

**உரிப்பொருள்கள்**

முதல், கரு, உரிப்பொருள்களுள் முதற்பொருள், கருப்பொருளைவிட உரிப்பொருளே தலையாயது என்பது சான்றோர் துணிபாகும். முதற்பொருளாலும், கருப்பொருளாலும் இன்ன திணை என்று முடிவு செய்யாதநிலையில் உரிப்பொருளைக் கொண்டு திணையை ஆசிரியர் உணர்த்துகிறார். முல்லைத் திணைக்குரிய உரிப்பொருள் "இருத்தலும் இருத்தல் நிமித்தமுமாகும்" (தொல்காப்பியம் இளம். பா.30) வினைமேற் சென்ற தலைவன் வினைக்களத்தே இருத்தலும் அவன் வருகையை நினைத்து தலைவி இல்லத்தே ஆற்றியிருத்தலும் முல்லை என்பர். இ∴து முல்லைப் பாட்டில்

**நெஞ்சாற்றுப்படுத்த நிறைதபு புலம்பொடு**

**நீடு நினைந்து ........**

**இன்பல் இமிழ் இசை ஓர்ப்பனள் இடந்தோள்"**

**(முல்லைப்பாட்டு அ. மாணிக்கனார் உரை)**

என இடம்பெறுகிறது. முல்லைப்பாட்டில் முல்லைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்களை அமைத்து ஆசிரியர் நப்பூதனார் முல்லைத் திணைக்குரிய சிறப்பினை விளக்கியிருப்பது கற்போருக்கு இன்பம் பயப்பதாக அமைந்துள்ளது. இதன்வழி செவ்வியல் கால மக்களின் வாழ்வியல் கூறுகளும் விளக்கப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

**உணவு**

முல்லைநில மக்கள் அந்நிலத்தில் இயற்கையாய் கிடைக்கும் உணவு வகைகளையே உண்டு வாழ்ந்து வந்தனர்.

**"நெல்லோடு நாழி கொண்ட"**

**"வானம் வாய்ந்த வாங்கு கதிர் வரகு"**

என்ற வரிகளில் உணவு பற்றிய செய்தியானது முல்லைப் பாட்டில் இடம் பெற்றுள்ளது.

**விலங்கு**

முல்லை நிலத்து உயிரினங்களில் யானை, பிடி, மான், மடப்பிணை, கலிமா, கலை, இரலை, குறுநரி, பன்றி, முயல் போன்றவை விலங்குகளாகும்.

**"சிறுதாம்பு தொடுத்த பசலைக்கன்று**

**கோவலர் பின் நின்று உய்த்தர**

**இன்னே வருகுவர் தாயர்**

**திரி மருப்பு இரலையோடு மடமான் உகழ"**

என்ற வரிகளில் விலங்குகளின் பெயர்களை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**மரம்**

ஆர், ஈங்கை, கொன்றை, தோன்றி, வாழை, வேங்கை முதலிய மரங்களும், கள்ளி, முசுண்டை, நெல் முதலிய செடியும், அவரை, பகன்றை போன்ற கொடிகளும் முல்லைப்பாட்டில் இடம்பெற்றுள்ளன. இச்செய்தி,

**செரியிலக் காயா அஞ்சன மலர**

**முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்**

**கோடல் குவிமுகை அங்கை அவிழத்**

**தோடார் தோன்றி குருதிப் பூப்ப**

என முல்லைப் பாட்டில் இடம்பெற்றுள்ளது.

**தொழில்**

முல்லை நில மக்கள் ஆநிரை மேய்த்தலையும், உழவு செய்தலையும் தொழிலாகக் கொண்டவர்கள். வரகு விதைக்கும் தொழிலையும் செய்தனர் என்பதை,

**வானம் வாய்ந்த வாங்கு கதிர் வரகு**

என நப்பூதனார் கூறுகிறார்.

மலைபடுகடாம் இவர்கள் தொழில் பற்றியும், இவர்கள் உபசரிப்புப் பற்றியும் குறிப்புத் தருகின்றது. வழிப்போக்கர்களுக்கு இவர்கள் பசுக்களின் பாலை அன்போடு தருவர். இரவில் சென்று தங்குபவர்களுக்கு பால்சோறு தந்து ஆட்டுத்தோலால் தைக்கப்பட்ட தோல் படுக்கையில் உறங்க வைப்பர் என்கிறது.

**வேறுபுலம் படர்ந்த ஏறுடை இனத்த**
**வளை ஆன் தீம்பால் மிளை சூழ்கோவலர்**
**வளையோர் உவப்பத் தருவனர்**
**------------------------------------------**
**பாலை மிதவையும் பண்ணாது பெருகுவிர் (408 – 410, 417)**

**திருமால்**

முல்லை நிலக் கடவுளான திருமால் மாயோன் எனச் சிறப்பிக்கப்படுகிறான். முல்லைப்பாட்டு, புறநானூறு, பெரும்பாணாற்றுப்படை, கலித்தொகை போன்ற நூல்களில் இக்கடவுள் போற்றப்படுகிறான். நீலமேனி அஞ்சன உரு, கடல் வண்ணம் எத் திருமாலின் வண்ணம் போற்றப்படுகிறது. நீனிறவுருவின் நெடியோன் (பெரும் 402) அஞ்சனவுருவான் (புறம்174) முந்நீர் வண்ணன் (பெரும் 36) என்பவை எடுத்துக்காட்டுகள். சக்கரப்படை, வலம்புரிச்சங்கு ஆகியவற்றை ஏந்திய பெரிய கைகளை உடையவன். திருமகளை மார்பில் தாங்குபவன், ஈரடியால் உலகை அளந்தவன் என முல்லைப் பாட்டில்திருமால் போற்றப்படுகிறான்.

**-------------- நேமியொடு**
**வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**
**நீர் செல நிமிர்ந்த மாஅல் (1-3)**

**முல்லை நிலத்தின் கருப்பொருட்கள்**

| | | |
|---|---|---|
| தெய்வம் | - | மாயோன் |
| மக்கள் | - | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் |
| உணவு | - | வரகு, சாமை |
| பறவைகள் | - | புள்(கருடன்), காட்டுக்கோழி |
| விலங்குகள் | - | மான், முயல், பசு, ஆடு, மரை |
| நீர்நிலை | - | காட்டாறு |
| மரங்கள் | - | கொய்யா, காயா, குருத்து |
| மலர்கள் | - | முல்லை, பிடா, தொன்றி |
| பண் | - | பறை, முல்லை யாழ் |
| பறை | - | ஏறுகோள் |
| தொழில் | - | சாமை வரகு விதைத்தல், களை எடுத்தல், குழலூதல், ஏறுதழுவுதல், குரவைக் கூத்தாடல், மந்தை மேய்த்தல். |
| ஊர் | - | பாடி |

**நிலப்பாகுபாடு**

காடு காட்டைச் சார்ந்த இடமும் முல்லை எனப்படும்.மக்கள் தாம் வாழும் இடங்களுக்கு ஏற்ப தம் ஊர் பெயரை மாற்றி அமைத்துக்கொண்டனர். சங்ககாலத்தில் நாடானது நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்டு அந்நிலத்தின் வழியே மக்களும் தங்களது வாழ்க்கைமுறையைக்

கொண்டிருந்தனர். குறிப்பாகக் காடும் காட்டைச் சார்ந்த இடத்தை முல்லை என்றும், மலையும் மலை சார்ந்த இடத்தை குறிஞ்சி என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடத்தை மருதம் என்றும், கடலும் கடலைச் சார்ந்த இடத்தை நெய்தல் என்றும் பிரித்து அந்நிலத்தை ஒட்டியே வாழ்ந்து வந்தனர்.

| திணை | | கடவுள் |
|---|---|---|
| குறிஞ்சி | - | முருகன் (சேயோன்) |
| முல்லை | - | திருமால் (மாயோன்) |
| மருதம் | - | இந்திரன் |
| நெய்தல் | - | வருணன் |
| பாலை | - | கொற்றவை |

**முல்லைப் பொழுது**

முல்லைக்குரிய பெரும்பொழுது கார்காலம். சிறுபொழுது மாலை ஆகும். இதனை,

**“காடும் மாலையும் முல்லை”**

எனத் தொல்காப்பியம் மொழிகின்றது.

கார்காலமானது வினை வயிற் பிரிந்து சென்றுள்ள தலைமகனுக்கும், வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் தலைமகளுக்கும் தனிமைத் துயரினை ஏற்படுத்தும் காலம்.மழைப் பொழியும் மாலை காலத்து உயிர்கள் தத்தம் துணையோடு வாழ விரும்புவது இயற்கை. அதனால் பிரிந்திருப்போர் சேரத் துடிப்பர். பிரிந்தோரைச் சேர்த்து வைக்கும் காலமாகவே முல்லைக்குரிய பொழுதுகள் சித்திரிக்கப்பெற்றுள்ளன.

**நிலமும் பொழுதும்**

முல்லைப்பாட்டில்

**கான்யாறு தழீஇய இகநெடும் புறவு**
**கானம் நந்திய செந்நிலப் பெருவிழி**
**முதிர்காய் வள்ளியங்காடு**

என்ற வரிகளில் நிலமும்,

**எதிர்செல் வெண்மழை பொழியும் திங்கள்**

என்ற வரியில் பெரும்பொழுதும் இடம் பெற்றுள்ளன.

**சிறுபொழுது**

முல்லைக்குரிய சிறுபொழுது மாலை. இ∴து,

**பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை**

என முல்லைப்பாட்டில் மொழியப்பெற்றுள்ளது.

கார் காலமானது மழை பொழியும் காலம். அது ஆவணித் திங்களும், புரட்டாசித் திங்களும் , மழையாவது இராப்பொழுதின் முற்கூறு என்பது இளம்பூரணம்.

**முல்லைத்திணைக்குரிய உரிப்பொருள்**

முல்லைக்குரிய உரிப்பொருளான இருத்தலைப் பற்றி நச்சினார்க்கினியர்,
இனித் தலைவி வழிப்பிரியார் என்றிருத்தல், பிரிந்துழிக் குறித்த பருவம் அன்றென்று தானே கூறுதல், பருவம் வருந்துணையும் ஆற்றியிருந்தமை பின்னர்க் கூறுவன ஆகியவை இருத்தல் என்று விளக்குவார்.

பொதுவாக, கருப்பொருள்களாகக் கருதப்படுபவை இவை என்று தொல்காப்பியர் விளக்கிறாரேயன்றி ஐந்திணைகளுக்கும் உரியவை இவை என்று வகுக்கவில்லை. உரையாசிரியர்களே அங்ஙனம் வகுத்துள்ளனர். மேலும்,

**“ஆயர் வேட்டுவர் ஆடு உத்திணைப் பெயர்**
**ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே”**

என்று முல்லைத் திணைக்குரிய மக்களை மட்டும் விளக்குகிறார்.

**முல்லைத்திணையும் மக்கள் வாழ்வும்**

மனித வரலாற்றின் ஆரம்ப கட்டங்களில் மலைகளிலும், குகைகளிலும் வாழ்ந்த மனிதர்கள் மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக அடுத்துள்ள கானகப் பகுதியான முல்லை நிலத்திற்குச் சென்றனர். மனிதன் இதற்குள் நாய், எருமை, பசு, ஆடு போன்ற விலங்குகளைப் பழக்கி வளர்க்கக் கற்றுக்கொண்டான்.மனித இனத்தின் நாகரிக வளர்ச்சியின் இரண்டாவது நிலையான “ஆயர் நிலை” இவ்வாறு எய்தப்பட்டது. முல்லை நிலத்தில் ஆடு, மாடுகள் விரைந்து பெருகும். அதனால் முதன் முதலாகத் தனிநபர் சொத்துரிமை இங்குதான் ஏற்பட்டது. இனக்குழுக்கள் , தனித்தனிக் குடும்பமுறை ஆகியவை உருவாகின. சமுதாயத்தின் இரண்டாவது வளர்ச்சி நிலை இது.

காதல் மணம், மணச்சடங்குகள் இன்மை ஆகிய தன்மைகளைக்கொண்டதும், “களவு” என்று பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பதுமான இயற்கை மணமும் முல்லை நிலத்தில் சிறிதுசிறிதாக மாறி கற்பு மணம் ஏற்பட்டது.

**முல்லைத்திணைப் பாடல்கள் வழி அறியும் சில செய்திகள்**

விரிச்சி கேட்டு நிற்கும்பொழுது நற்சொல் கேட்பின், நன்மை நடக்கும் என்றும் நல்லது அல்லாத சொல் கேட்பின், நன்மை நடவாது என்றும் நம்பினர் அக்கால மக்கள். இன்று கிராம மக்களிடையே இந்தப் பழக்கம் தொடர்கிறது.

யானைகளோடு பேசப் பாகர்கள் வடமொழியைப் பயன்படுத்தினர். போர்க்களங்களில் மங்கையர் பணி புரிந்தனர். ஏழடுக்கு மாளிகைகளில் மக்கள் வசித்தனர். நாழிகைக் கணக்கர் “நாழிகை வட்டில;” கொண்டு காலத்தைக் கணித்தனர்.அரசுச் செய்திகளைப் பிறர் அறியாதிருக்க ஊமையர்களை (மிலேச்சர்) அரசர்கள் தங்களுக்குக் காவலாக வைத்திருந்தனர். இவைபோன்ற சங்கச் செய்திகள் பலவற்றை முல்லைத்திணைப் பாடல்கள்வழி அறிய முடிகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் முல்லைத்திணை அதன் தன்மையில் சிறந்து விளங்குவதைக் காணமுடிகிறது. இயற்கையும், முல்லைநில மக்களின் வாழ்க்கை முறையும் ஒன்றியுள்ளன. மரங்கள், செடிகொடிகள் போன்றவையும், விலங்குகளான யானை, மான், பன்றி, முயல் ஆகியவையும், பறவைகளான கருடன், காட்டுக்கோழி என்பவையும் இருக்கின்றதை உணரமுடிகிறது. முல்லை நில மக்கள் தொழில்களான வரகு விதைத்தல், களை எடுத்தல் போன்றவை இடம்பெற்றுள்ளன. பொழுதுபோக்குகளான குழலூதல், ஏறுதழுவுதல் ஆகியவற்றை மேற்கொண்டனர் என்பதை அறிகிறோம்.